GODDependence
True freedom is being dependent on God

# செய்தி மடல்

ஏப்ரல் 2025



## பிதாவே, இவர்களுக்கு மன்னியும் ...

அப்பொழுது இயேசு: பிதாவே, இவர்களுக்கு மன்னியும், தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே என்றார். (லூக்கா 23:34)

சமீபத்தில் என் கிறிஸ்தவ நண்பர்களிடையே இருக்கிற உறவுசார்ந்த பிரச்சனைகளைப் பற்றி சிந்தித்துக் கொண்டிருந்தபோது, அவர்களுடைய வேதனை, கசப்பு மற்றும் உடைந்துபோன இருதயங்கள் அவர்களுக்கிடையே ஒரு பிளவை ஏற்படுத்தி இருப்பதை உணர்ந்தேன். மிகவும் நல்ல மற்றும் தேவபக்தியுள்ள கிறிஸ்தவர்கள் ஏன் இதுபோன்ற பிரச்சனைகளை உடையவர்களாக இருக்கிறார்கள்? தங்கள் இருதயங்களில் கசப்புணர்வை அனுபவிப்பதற்குப் பதிலாக இவர்களால் ஏன் ஒருவரையொருவர் நேசிக்க மற்றும் கனப்படுத்த முடியவில்லை. இதுபோன்ற பலகேள்விகள் என் மனதில் எழும்பின. இப்பிரச்சனையின் அடிநாதமான கசப்பானதொரு உண்மையைக் கண்டுகொள்ள தேவன் எனக்கு உதவினார். நண்பர்கள் அல்லது உறவினர்கள் தங்களுக்கு எதிராக தெரிந்தோ தெரியாமலோ செய்தவைகளை இவர்களால் மன்னிக்கவோ மறக்கவோ முடியவில்லை.

"தவறு செய்வது மனித இயல்பு, மன்னிப்பது தெய்வீகம்" என்ற சான்றோர் சொல்லை மக்கள் அடிக்கடிச் சொல்வதுண்டு. ஆனால், நம்மில் பலருக்கும் மற்றவர்களை, நமக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் மற்றும் உறவினர்களைக் கூட, மன்னிப்பது மிகவும் கடினமானதாக இருக்கிறது. "நான் மன்னிப்பேன், ஆனால் அவன்/அவள் எனக்கு எதிராக செய்ததை ஒருபோதும் மறக்கமாட்டேன்/மறக்கமுடியாது" என்று சிலர் கூறுகின்றனர். ஒருவிதத்தில், இதுவும் கூட மன்னிக்காமல் இருப்பதையே குறிக்கிறது. நம் நவீன அவசர உலகில் மன்னிக்கமுடியாமல் இருக்கும் தன்மையானது வியாதிகளையும் தீமைகளையும் உண்டாக்கக்கூடும் என்பதை அறிவது எனக்கு ஆச்சரியமானதாக இருக்கிறது.

நாம் ஆண்டவரிடம் எத்தனைமுறை மன்னிப்பு கேட்டிருக்கிறோம் என்பதை கணக்கிட்டால்........... அது முடியுமா என்பது சந்தேகம்தான். எண்ணமுடியாத அளவுக்கு நாம் தேவனிடம் மன்னிப்பு கேட்டிருக்கிறோம் என்பது அனைவரும் அறிந்த உண்மை.தேவனிடம் மன்னிப்புக் கேட்க நாம் தயங்குவதே இல்லை. ஆனால், நாம் செய்த தவறுகள் மற்றும் தவறான செயல்களுக்குக் கூட மற்றவர்களிடம் மன்னிப்பு கேட்பதற்கு நாம் மிகவும் தயங்குகிறோம். நம்முடைய ஈகோ மற்றும் சுயமரியாதை மன்னிப்பு கேட்பதற்கு தடையாக இருக்கிறது. "ஆண்டவரே, என்னால் அந்த நபரிடம் போய் மன்னிப்பு கேட்கமுடியாது. ஆகவே, அந்நபரிடம் சென்று மன்னிப்பு கேட்காமல் (ஒப்புரவாகாமல்) இருப்பதற்காகவும் என்னை மன்னித்தருளும்" என்று சிலர் ஜெபிக்கின்றனர். நாம் யாராக இருந்தாலும், நாம் செய்த செயல்களுக்கு வருத்தம் தெரிவிக்கவும், மன்னிப்பு கேட்கவும் தயங்கக்கூடாது என்பதை நினைவில் கொள்வோம்.

பல சமயங்களில், தவறு நம் பக்கம்தான் என்று தெரிந்தால் நமக்கு மன்னிப்பு கேட்பது கடினமானதாக இருப்பதில்லை. நாம் எந்தத் தவறும் செய்யவில்லை எனில், அல்லது காரணமின்றி துன்பப்படும்போது, நாம் என்ன செய்ய வேண்டும்? நாம் இயேசுவை நோக்கிப்பார்த்து அவர்மீது நம் கண்களைப் பதிக்க வேண்டும். இயேசு செய்ததைப் பின்பற்றி நாம் அவர் செய்ததுபோல செய்யவேண்டும். நாம் முழு மனதுடன் மற்றவர்களை மன்னித்து அவர்களுக்காக ஜெபிக்க வேண்டும். மற்றவர்களைக் குற்றப்படுத்தி அல்லது குறை கூறுவதற்குப் பதிலாக, அவர்களுக்காகப் பரிந்து பேசி ஜெபிக்கவேண்டும். நாம் இதைச் செய்யும்போது, நம் தேவனிடமிருந்து நீதியின் பலனைப் பரிசாகப் பெறுவோம்.

இயேசு பரிசுத்தரும், குற்றமற்றவரும், மாசில்லாதவரும், பாவிகளுக்கு விலகினவரும், வானங்களிலும் உயர்ந்தவருமாயிருக்கிறார். ஆனாலும் அவர் தண்டிக்கப்பட்டார். நிந்திக்கப்பட்டார். சிலுவையிலறையப்பட்டார். அவர் நீதிமான் என்பது சகலருக்கும் தெரிந்திருந்தது. பிலாத்துவும் அதை அறிக்கையிட்டான். ஆனாலும் அவரை பாதகர் கையிலே ஒப்புக் கொடுத்தான். இயேசுவோ அனைவரையும் மன்னித்தார். "தாங்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிறார்களே" என்று அவர்களின் அறியாமையை எடுத்துக் கூறினார். நம் ஆத்துமாக்களில் சோர்ந்துபோகாதபடிக்கு, இப்படிப்பட்ட விபரீதங்களை பொறுமையுடன் சகித்த இயேசுவை நாம் நினைவில் கொள்வோம்.

நாம் ஒருவரை மன்னிக்கமுடியாமல் இருக்கும்போது அவரைப் பற்றிய எரிச்சல் நமக்குள் இருப்பதால் அது நம் ஆவிக்குரிய வாழ்க்கையையும் பாதிக்கிறது. அது நம் ஜெபம் மற்றும் தியானம் அனைத்தையும் வெறுமையானதாக்குகிறது. மேலும், நாம் தேவனுடைய பிரசன்னத்தை அனுபவிப்பதை கடினமானதாக்கிவிடுகிறது. ஆகவே மன்னிப்பின் மேன்மையை உணர்ந்தவர்களாய், "ஆண்டவரே என்னை மன்னியும்! பிறரை மன்னிக்கவும் பிறரிடம் தயங்காதுமன்னிப்பு கேட்கவும் எனக்கு அருள்புரியும்" என்று தேவனிடம் நாம் கேட்போம். இயேசு மன்னித்தது போல, நாமும் நம் வாழ்வில் செயல்பட தேவன் நமக்கு உதவுவாராக.

**- சகோ. அற்புதராஜ் சாமுவேல், பெங்களூர்.**

**தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தினால் நம் மனங்களை நாம் நிரப்பும்போது, நம் சிந்தனைகளில் உள்ள புரட்டுகளையும், இந்த உலகம் நம்மீது திணிக்க விரும்பும் பொய்களையும் நாம் எளிதில் அடையாளம் கண்டுகொள்வோம். - பெயர் அறியப்படாதவர்**

# ஆசிரியரிடமிருந்து

**கிறிஸ்துவுக்குள் மிகவும் பிரியமான சகோதர சகோதரிகளே,**

நமது ஆண்டவரும் இரட்சகருமாகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் GODependence குழுவின் சார்பில் எனது அன்பின் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இந்த செய்திமடல் மூலம் மீண்டும் உங்களுடன் தொடர்பு கொள்ள தேவன் கொடுத்த இந்த வாய்ப்பிற்காக அவருக்கு நன்றி செலுத்துகிறேன்.

இந்த லெந்து காலத்தின் வழியாக நாம் கடந்து செல்லும் போது, நமது இதயங்கள் அன்பும் துன்பமும் இரட்சிப்பும் சந்திக்கின்ற சிலுவையின் பாதத்திற்கு நேராக மீண்டும் இழுக்கப்படுகின்றன. கிறிஸ்துவின் பாடுகள் என்பது அவர் பட்ட துன்பத்தின் விபரங்கள் மட்டுமல்ல, அதுதான் சுவிசேஷத்தின் இதயத் துடிப்பு; எதையும் தனக்கென்று வைத்துக் கொள்ளாத அன்பின் தெய்வீக வெளிப்பாடு. ஏசாயா 53:3 கூறுகிறது: “அவர் அசட்டைப்பண்ணப்பட்டவரும், மனுஷரால் புறக்கணிக்கப்பட்டவரும், துக்கம் நிறைந்தவரும், பாடு அநுபவித்தவருமாயிருந்தார்”. துன்பங்களில் இந்த உலகம் தனது முகத்தை திருப்பிக்கொள்ளும்போது, இயேசு கிறிஸ்து நமது துன்பங்களுக்குள்ளாக கடந்து வந்தார். அவர் துன்பத்தின் பாத்திரத்தை தவிர்க்கவில்லை; அவர் அதனை தழுவிக் கொண்டார். நண்பனால் மறுதலிக்கப்பட்டார், சீடர்களால் கைவிடப்பட்டார், தான் மீட்க வந்தவர்களால் குற்றம் சாட்டப்பட்டார். அவர் பலவீனத்தினால் அல்ல, அளவில்லாத அன்பினால் ஒவ்வொரு காயங்களையும் ஏற்றுக்கொண்டார்.

இதற்கு பாத்திரமாகத் தக்கதாக நாம் ஒன்றும் செய்யவில்லை. இருப்பினும் கிறிஸ்து நம்மை மீட்பதற்காக எல்லாவற்றையும் இழந்தார். ”நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே, தேவன் நம்மேல் வைத்த தமது அன்பை விளங்கப்பண்ணுகிறார்” (ரோமர் 5:8). சிலுவை என்பது ஒரு பிழை அல்ல; அதுதான் தேவனுடைய திட்டம். கிறிஸ்துவின் பாடுகளை நாம் தியானிக்கும் போது, அது நம்மை இன்னும் ஆழ்ந்த அர்ப்பணிப்புக்குள் வழிநடத்தட்டும். நமது நன்றியின் வெளிப்பாடு அவருக்கு ஆராதனையாக பெருக்கெடுக்கட்டும்.


கலாத்தியர் 2:20 பவுல் கூறுவது போன்று, ”கிறிஸ்துவுடனேகூடச் சிலுவையிலறையப்பட்டேன்; ஆயினும், பிழைத்திருக்கிறேன்; இனி நான் அல்ல, கிறிஸ்துவே எனக்குள் பிழைத்திருக்கிறார்” என்று நாமும் உறுதியுடன் சொல்வோம்.

பிப்ரவரி 28 இல் தொடங்கி மார்ச் 30 ல் முடிவடைந்த ரமலான் கால வேதவாசிப்பு சவாலில் சுமார் 290 பேர் கலந்து கொண்டனர்; அவர்களில் 21 பேர் பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தனர். மார்ச் 05 ல் ஆரம்பித்த லெந்து கால வேதவாசிப்பு சவாலில் 1250 க்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.

கடந்த மாதத்தில் நாம் திட்டமிட்டபடி GODependence கருத்தரங்குகள் ஆரம்பிக்க தேவன் கிருபை பாராட்டினார். ஜெபத்தில் உபவாசத்தின் அவசியத்தை வலியுறுத்துவதாக அமைந்த நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அது பிரயோஜனமாக இருந்தாக கருத்துகள் பகிர்ந்து கொண்டனர்.

வேதவாசிப்பு சவால்களில் கலந்துகொண்டு வெற்றிகரமாக பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடித்தவர்களுக்கான பாராட்டுச் சான்றிதழ்கள் அல்லது பரிசுடன் கூடிய சான்றிதழ்களை மொத்தமாக அனுப்புவதில் நமது முழுவினர் ஈடுபட்டிருப்பதால் தற்போது ஏப்ரல் 2025 ல் மீண்டும் ஆரம்பித்து நடத்த திட்டமிடப்பட்ட வேத தியான குழுக்கள் ஜூலை 2025 க்கு தள்ளிப் போகின்றன. 2025-க்காக திட்டமிடப்பட்டுள்ள ஊழிய நடவடிக்கைகள் அனைத்தும் ஒழுங்காகவும் எவ்வித தடையில்லாமலும் நடைபெற வேண்டுமென்று உங்கள் ஜெபங்களில் எங்களை நினைத்துக் கொள்ளுங்கள்.

’வேதாகம குறுக்கெழுத்துப் புதிர்’ மற்றும் ’விளையாடுவோம் வேதாகம விளையாட்டு’ போன்றவைகளில் உற்சாகமாக கலந்து கொள்கிற ஒவ்வொருவரையும் மனமார வாழ்த்துகிறோம். GODependence ஊழியங்களுக்காக தொடர்ந்து ஜெபியுங்கள். இதன் சேவைகளை மற்றவர்களுக்கும் அறிமுகப்படுத்துங்கள். கர்த்தருடைய நாமம் மகிமைப்படுவதாக.



**கிறிஸ்துவின் பணியில்,**
**Dr. பேதுரு தேவதாசன்.**

## துதி மற்றும் ஜெபக் குறிப்புகள் - ஏப்ரல் 2025

**துதிப்போம்:**

1. 2025 மார்ச் மாத இறுதியில் வேதவாசிப்பை வெற்றிகரமாக நிறைவு செய்தவர்களுக்காக.
2. 2025 பிப்ரவரி மாதத்தில் ஆரம்பித்த ரம்ஜான் 2025 வேதவாசிப்புக் குழுவில் இணைந்து வெற்றிகரமாக வேதவாசிப்பை நிறைவு செய்தவர்களுக்காக.
3. 11 மற்றும் 12 ம் வகுப்பு பொதுத்தேர்வை மாணவ மாணவியர் நல்லமுறையில் எழுதி முடித்ததற்காக.
4. 2025 மார்ச் மாதத்தில் GODependence Talk Show சிறப்பான முறையில் நடைபெற ஆண்டவர் பாராட்டின கிருபைகளுக்காக.
5. லெந்து கால வேதவாசிப்பு சவால் 2025 குழுவில் இணைந்து உற்சாகமாய் வேதாகமத்தை வாசித்து வருபவர்களுக்காக.

**ஜெபிப்போம்:**

1. 2025 ஏப்ரல்மாத வேதவாசிப்பு சவால் குழுக்களில் இணைந்து வேதாகமத்தை வாசிப்பவர்கள் வெற்றிகரமாக நிறைவுசெய்ய.
2. NEET தேர்வுக்கான ஆயத்தத்தில் ஈடுபட்டிருக்கும் மாணவ மாணவியருக்கு ஆண்டவர் ஞானத்தை தர.
3. 12 ம் வகுப்பு பொதுத்தேர்வு எழுதிய மாணவ மாணவியர் நல்ல மதிப்பெண்கள் பெற்று விரும்பிய உயர்கல்வியில் இணைய.
4. 2025 ஏப்ரல் மாதத்தில் நடைபெற உள்ள GODependence Talk Show பயனுள்ளதாக அமைய.
5. மீண்டும் ஆரம்பிக்க இருக்கும் Bible Meditation குழுக்களுக்கான ஆயத்தப்பணிகளுக்காக.

**பரிசுத்த வேதாகமம் பெருங்கடலைப் போன்றது. நீங்கள் அதில் பயணம் செய்யலாம், அதில் இருந்து உணவைப் பெறலாம், அதின் மீது உங்கள் வாழ்க்கையை வாழலாம் அல்லது அதில் மூழ்கலாம். ஆனால் வேதாகமத்தின் உண்மைகளைக் கற்றுக் கொள்ள நேரம் கொடுத்து அவைகளை தங்கள் வாழ்க்கையில் கடைபிடிப்பவர்கள் முற்றிலுமாக மாற்றப்படுவார்கள்.**

# உபவாசம் மற்றும் ஜெபத்தின் ஆன்மீக மற்றும் உடல்சார்ந்த நன்மைகள்

**- டாக்டர். டயானா தம்பி எபனேசர்**



உபவாசம் மற்றும் ஜெபம் என்பவை வரலாறு முழுவதும் இணைந்து வரும் நடைமுறைகளாகும். இவை தனிநபர்களின் ஆன்மீக மற்றும் உடல் நலனுக்கு ஆழமான முக்கியத்துவம் வாய்ந்தவை. இந்த வல்லமை வாய்ந்த இணைப்பு, ஒரு தற்காலிக ஒழுக்கமாக மட்டுமல்லாமல், மாற்றமளிக்கும் வாழ்க்கை முறையாகும். இது தேவனுடன் ஆழமான தொடர்பு கொள்ளவும், உடலுக்கு உறுதியான நன்மைகளைப் பெறவும் ஒரு தனித்த வழியை வழங்குகிறது. உணவு அல்லது பானத்தை வேண்டுமென்றே தவிர்த்து, கவனமாக ஜெபத்தில் ஈடுபடுவதன் மூலம், விசுவாசிகள் ஆன்மீக உணர்திறனை மேம்படுத்திக் கொள்ளலாம் மற்றும் உடல் நலன்களை அனுபவிக்கலாம்.

### உபவாசம் மற்றும் ஜெபத்திற்கான வேதாகம அடிப்படை

இயேசுவின் போதனைகள், உபவாசம், ஜெபம் மற்றும் தான தர்மம் ஆகியவற்றை ஒவ்வொரு கிறிஸ்தவனின் அடிப்படை கடமைகளாக இணைக்கின்றன. மத்தேயு 6 ம் அதிகாரத்தில் இயேசு இந்த நடைமுறைகளைப் பற்றி பேசும்போது, "நீங்கள் தர்மஞ்செய்யும் போது...", "நீங்கள் ஜெபம்பண்ணும் போது...", "நீங்கள் உபவாசிக்கும் போது..." என்று குறிப்பிட்டார். இது உபவாசம் மற்ற இரண்டு நடைமுறைகளைப் போலவே கிறிஸ்தவ வாழ்க்கையின் ஒரு சாதாரண பகுதியாகும் என்பதைக் காட்டுகிறது. மேலும், பழைய ஏற்பாட்டில், தேவன் தனது ஜனங்களிடம் உபவாசத்தை அதிகமாக முக்கியத்துவப்படுத்தினார். வேதாகமம் முழுவதும், தேவனுடைய அனுகிரகம், வழிகாட்டுதல் மற்றும் விடுதலைக்காக உபவாசம் மற்றும் ஜெபத்தை இணைக்கும் எண்ணற்ற உதாரணங்கள் உள்ளன.

### ஆன்மீக நன்மைகள்

உபவாசம் மற்றும் ஜெபத்தின் இணைந்த ஒழுக்கம், தேவனுடன் நெருக்கமான உறவை வளர்ப்பதற்கும், ஆவிக்குரிய பகுத்தறிவை மேம்படுத்துவதற்கும் பல நன்மைகளைத் தருகிறது. நீங்கள் பல நாட்கள் உணவு இல்லாமல் இருக்கும்போது, உங்கள் ஆன்மா இந்த உலக விஷயங்களால் குழப்பமடையாமல், தேவனுடைய காரியங்களுக்கு அதிக உணர்திறன் கொண்டதாக மாறுகிறது. இந்த உயர்ந்த உணர்திறன், தேவனுடன் ஆழமான நெருக்கத்திற்கும், அவரது சரியான விருப்பத்தை அறிவதற்கும் வழிவகுக்கும். ரிச்சர்ட் ஃபோஸ்டர் தனது "The Celebration of Discipline" என்ற புத்தகத்தில் குறிப்பிடுகையில், "மற்ற எந்த ஒழுக்கத்தையும் விட, உபவாசம் நம்மை கட்டுப்படுத்தும் விஷயங்களை வெளிப்படுத்துகிறது. இது இயேசு கிறிஸ்துவின் பிம்பத்தில் மாற்றப்பட விரும்பும் சீடருக்கு ஒரு அருமையான நன்மையாகும். நாம் உணவு மற்றும் பிற விஷயங்களால் நம்முள் இருக்கும் விஷயங்களை மறைக்கிறோம்." என்கிறார். இவ்வாறு, உபவாசம் மற்றும் ஜெபம் ஆன்மீக வளர்ச்சிக்கும், சுய பிரதிபலிப்புக்கும் ஒரு சக்திவாய்ந்த கருவியாக மாறுகிறது.

மேலும், உபவாசம் மற்றும் ஜெபம் வானத்தின் கதவைத் திறக்கும் மற்றும் நரகத்தின் வாயில்களை மூடும் ஒரு ரகசிய சாவியாக வழங்கப்படுகிறது. இது அவற்றின் சக்திவாய்ந்த ஆன்மீக தாக்கத்தைக் குறிக்கிறது. இவை தேவனுக்கு முன்பாக நம்மைத் தாழ்த்தும் ஒரு வழியாகும். ராஜா தாவீது கூறியது போல், " நான் உபவாசத்தால் என் ஆத்துமாவை உபத்திரவப்படுத்தினேன்" (சங்கீதம் 35:13). இந்த தாழ்மையான நிலை, தேவனை நெருங்குவதற்கும், அவரது கிருபையைப் பெறுவதற்கும் முக்கியமானது. தேவனிடமிருந்து தூரமாக உணரும்போது, உபவாசம் ஆன்மீக இணைப்பை புதுப்பித்து, புத்துணர்ச்சியைத் தூண்டும்.

இந்த நடைமுறை நமது கவனத்தை தேவன் மீது குவிக்கிறது மற்றும் அவரை நம்பியிருக்கும் நமது சார்பை வெளிப்படுத்துகிறது. இது தாழ்மையுடன் தேவனைத் தேடுவதற்கும், நம் இதயங்களை தேவனுடைய விருப்பத்துடன் ஒத்திசைவதற்கும் ஒரு வல்லமை வாய்ந்த வழியாகும். மேலும், உபவாசம் தேவன் நமக்கு புதிய வெளிப்பாடு, புதிய தரிசனம் மற்றும் தெளிவான நோக்கம் கொடுப்பதற்கு வழிவகுக்கிறது. இது நம்மை அவரது ஆவியானவருக்கு உணர்வுள்ளவர்களாக வைத்திருக்கிறது, பரிசுத்தமாக வாழ உதவுகிறது. சங்கீதம் 42:1-2 இல் வெளிப்படுத்தப்பட்ட ஏக்கம், "மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவதுபோல, தேவனே, என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுகிறது. என் ஆத்துமா தேவன்மேல், ஜீவனுள்ள தேவன்மேலேயே தாகமாயிருக்கிறது; நான் எப்பொழுது தேவனுடைய சந்நிதியில் வந்து நிற்பேன்?" என்று கூறுகிறது. இந்த ஏக்கம் உபவாசம் மற்றும் ஜெபத்தின் போது ஆழமாக ஒலிக்கிறது.

### உடல்சார்ந்த நன்மைகள்

உபவாசம் மற்றும் ஜெபத்தின் முதன்மையான முக்கியத்துவம் பெரும்பாலும் ஆன்மீகமாக இருந்தாலும், சில ஆதாரங்கள் உடல் உடல்சார்ந்த அம்சங்களைக் காட்டுகின்றன. "அப்படியிருக்க, சகோதரரே, நீங்கள் உங்கள் சரீரங்களைப் பரிசுத்தமும் தேவனுக்குப் பிரியமுமான ஜீவபலியாக ஒப்புக்கொடுக்க வேண்டுமென்று, தேவனுடைய இரக்கங்களை முன்னிட்டு உங்களை வேண்டிக்கொள்ளுகிறேன்; இதுவே நீங்கள் செய்யத்தக்க புத்தியுள்ள ஆராதனை." (ரோமர் 12:1) என்று விசுவாசிகள் அறைகூவல் விடப்படுகின்றனர். ஒழுக்கமான உபவாசத்தில் ஈடுபடுவது, ஆன்மீக கவனத்திற்கு உதவும் வகையில் உடலை அர்ப்பணிப்பதாகக் கருதப்படுகிறது.

மேலும், ஆதாரங்கள் குறிப்பிடுவது போல், உபவாசம்—குறிப்பாக ஆன்மீக தேடுதலுடன் இணைந்தால்—குறிப்பிடத்தக்க உடல் நலன்களைக் கொண்டிருக்கலாம்:

- உபவாசம் இயற்கையாகவும் பொருளாகவும் உடல் ஆரோக்கியத்தைக் கொண்டுவருகிறது (ஏசாயா 58:8).
- உபவாசம் சோதனைக்கு நம்மைத் தயார்படுத்துகிறது (மத்தேயு 4:1-11). இது தன்னடக்கத்தை வளர்ப்பதற்கும், உடல் திருப்தியை விட ஆன்மீக வலிமையை நம்புவதற்கும் தொடர்புடையதாக இருக்கலாம்.
- உபவாசம் நமது அழைப்பைத் திறக்கிறது (அப்போஸ்தலர் 13:2). இங்கு முதன்மையாக ஆன்மீக சூழல் இருந்தாலும், இது வாழ்க்கையின் தெளிவான நோக்கத்தைக் குறிக்கிறது, இது உடல் செயல்களையும் திசையையும் பாதிக்கும்.
- உபவாசம் உங்கள் வாழ்க்கையில் தேவ வல்லமையை வெளிப்படுத்துகிறது (லூக்கா 4:14, உபாகமம் 8:18). இந்த வலல்மை ஆன்மீகமாகவும் உடல்ரீதியாகவும் வெளிப்படலாம், வலிமை மற்றும் உறுதியை வழங்குகிறது.

உபவாசத்தின் போது ஏற்படும் உடலியல் நிலைகளைப் புரிந்துகொள்வது முக்கியம். இதில் ஆரம்ப பசி மற்றும் விருப்பங்கள், நீடித்த காலத்திற்குப் பிறகு கீட்டோசிஸ் மற்றும் ஆட்டோபேஜி போன்ற நிலைகள் அடங்கும்.

**பரிசுத்த வேதாகமம் என்பது நம் வாழ்க்கையை தேவனை நோக்கி திருப்பி, அதன் மூலமாக நம் ஆத்துமாவுக்குத் தேவையான அனைத்து ஊட்டச்சத்துகளையும் பெற உதவுகிற புத்தகம் ஆகும். - பிரயன் ஹார்டின்**

தலைவலி, சோர்வு மற்றும் செரிமான பிரச்சினைகள் போன்ற பக்க விளைவுகளைப் பற்றிய விழிப்புணர்வும் முக்கியமானது. எந்தவொரு மருத்துவ பிரச்சினைகள் இருந்தாலும் உபவாசத்தைத் தொடங்குவதற்கு முன் உங்கள் மருத்துவரைக் கலந்தாலோசிக்கவும் என்று அறிவுறுத்தப்படுகிறது.

## உபவாசம் மற்றும் ஜெபத்தில் ஈடுபடுவதற்கான நடைமுறை வழிகாட்டுதல்

***உபவாசம் மற்றும் ஜெபத்தை ஒருவரின் ஆன்மீக வாழ்க்கையில் பயனுள்ளதாக ஒருங்கிணைக்க, பின்வரும் நடைமுறை ஆலோசனைகள் வழங்கப்படுகின்றன:***

- உபவாசத்தைத் தொடங்குவதற்கு முன் படிப்படியாகத் தயாராகுங்கள்.
- தொடக்கத்தில் குறுகிய காலத்துடன் சிறிய அளவில் தொடங்குங்கள்.
- உபவாசத்திற்கு முன்னதாக உணவு உட்கொள்ளலை மெதுவாகக் குறைத்து, நீர் அளவை அதிகரிக்கவும்.
- மருத்துவ பிரச்சினைகள் இருந்தால், உபவாசத்தைத் தொடங்குவதற்கு முன் மருத்துவரைக் கலந்தாலோசிக்கவும்.
- ஜெபம் மற்றும் தேவனைத் தேடுவதற்கு நேரத்தை ஒதுக்க, உங்கள் அட்டவணையை முடிந்தவரை சரி செய்யவும்.
- முழுமையான உபவாசம் இல்லாவிட்டால், நீங்கள் உட்கொள்ளப் போவதைத் திட்டமிடுங்கள். தண்ணீர் அல்லது பழச்சாறு போன்ற எளிய உணவுகளில் கவனம் செலுத்துங்கள்.
- நீரேற்றம் பராமரிக்க நிறைய தண்ணீர் குடிக்கவும்.
- வேதாகமத்தை வாசிக்கவும், ஜெபிக்கவும் குறிப்பிட்ட நேரங்களை ஒதுக்கவும்.
- போதுமான நேரம் இருந்தால், துதி பாடல்களைக் கேட்டு, தேவனை ஆராதியுங்கள்.
- நீங்கள் ஜெபித்து, தேவனிடம் நம்பிக்கை வைத்திருக்கும் விஷயங்களின் பட்டியலைத் தயாரிக்கவும்.
- உங்கள் உபவாசத்தைப் பற்றி மற்றவர் கவனத்தை ஈர்ப்பதைத் தவிர்க்கவும்; அதை தேவனுக்கும் உங்களுக்கும் இடையிலான தனிப்பட்ட விஷயமாக வைத்திருங்கள்.
- சமூக ஊடகங்கள் மற்றும் அதிகப்படியான பொழுதுபோக்குகள் போன்ற திசைதிருப்பல்களிலிருந்து விலகுங்கள்.
- பசியாக உணரும்போது, ஜெபத்திற்குத் திரும்பி, தேவனிடம் வலிமை கேளுங்கள்.
- மற்றவர்களை நீங்கள் எவ்வாறு நடத்துகிறீர்கள் என்பதைக் கவனியுங்கள், ஆவியானவர் உங்கள் தொடர்புகளை வழிநடத்தட்டும்.
- எப்போதும் உங்கள் உபவாசத்தை ஜெபம் மற்றும் துதியுடன் முடிக்கவும், தேவனின் நம்பிக்கைக்குரிய தன்மையை ஒப்புக்கொள்ளுங்கள்.
- நீண்ட கால உபவாசத்திற்குப் பிறகு கவனமாக உபவாசத்தை நிறைவு செய்ய வேண்டும். அதனை பழம் அல்லது காய்கறி சாறுகள் போன்ற எளிதில் செரிக்கக்கூடிய உணவுகளுடன் தொடங்குங்கள்.
- சில நாட்களில் சிறிய சிற்றுண்டிகளுடன் படிப்படியாக வழக்கமான உணவுக்குத் திரும்புங்கள்.
- ஆரம்பத்தில் வரும் சிரமங்களால் உற்சாகம் இழந்துவிட வேண்டாம்; "உபவாச தசைகளை" உருவாக்க சற்று நேரம் எடுக்கும்.
- ஒரு பெரிய விருந்துடன் உங்கள் உபவாசத்தை முடிப்பதை தவிர்க்கவும்.

## சரியான மனதுடன் உபவாசம்

உபவாசத்திற்கான தவறான உந்துதல்கள் மற்றும் அணுகுமுறைகளுக்கு எதிராக ஆதாரங்கள் எச்சரிக்கின்றன. வேதாகம ரீதியான உபவாசம் தேவனுக்கும் உங்களுக்கும் இடையிலான பட்டினிப் போராட்டம் அல்ல, மேலும் இது தேவனுடைய அனுகிரகத்தைப் பெறுவதற்கோ அல்லது அவரை கையாளுவதற்கோ உத்தேசிக்கப்படவில்லை. கிறிஸ்தவர்கள் கபடமான அல்லது காட்சிக்காக உபவாசம், மனம் மாறாமல் அல்லது மாற்றமில்லாமல் உபவாசம், கருணை அல்லது நீதியில்லாமல் உபவாசம், இதயமில்லாத ரீதியான உபவாசம், சுயநல நோக்கங்களுக்காக உபவாசம், கடவுளில் நம்பிக்கை அல்லது நம்பிக்கையில்லாமல் உபவாசம் மற்றும் உடலுக்கு தீங்கு விளைவிக்கும் உபவாசம் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும். நமது கவனம் தேவனை ஒரு நேர்மையான மற்றும் தாழ்மையான இதயத்துடன் தேடுவதில் இருக்க வேண்டும். இது உங்களுக்கு எதையும் தரவில்லை என்றால், அது தேவனுக்கும் எதையும் தராது.

## முடிவுரை

உபவாசம் மற்றும் ஜெபம் இவற்றை இணைந்த நடைமுறை, ஒரு முழுமையான மாற்றத்திற்கான ஒரு வல்லமை மிகுந்த வழியை வழங்குகிறது. உடல் உபவாசம் மற்றும் ஆர்வமான ஆன்மீக தேடுதலில் திட்டமிட்டு ஈடுபடுவதன் மூலம், தனிநபர்கள் தேவனுடன் ஆழமான நெருக்கத்தை வளர்க்கலாம், ஆன்மீக தெளிவைப் பெறலாம் மற்றும் உடல் நலன்களை அனுபவிக்கலாம். சரியான நோக்கங்கள் மற்றும் நடைமுறை ஞானத்துடன் மேற்கொள்ளப்படும் போது, இந்த பழங்கால ஒழுக்கம் ஆவிக்குரிய வளர்ச்சி, தனிப்பட்ட வளர்ச்சி மற்றும் ஆன்மீக மற்றும் உடல் சார்ந்த காரியங்களில் தேவனுடைய வல்லமையை அனுபவிப்பதற்கான ஒரு முக்கியமான கருவியாக உள்ளது. இந்த ஆன்மீக ஒழுக்கங்களை நம் வாழ்க்கையில் வளர்த்துக் கொள்ள தேவன் நமக்கு உதவுவாராக.

- டாக்டர். டயானா தம்பி எபனேசர்

### சரியான பதில்கள்

➡ இடமிருந்து வலம்
1. நாற்பது (1:3)
6. ஏழு (6:2,3)
8. யூலியு (27:3)
9. பிலிப்பு (8:35)
10. புபிலியு (28:7)
12. மனாயீன் (13:1)
14. அனனியா (5:1)

⬇ மேலிருந்து கீழ்
2. பர்னபா (9:27)
4. கொர்நேலியு (10:1)
5. தர்சு (21:39)
11. யுஸ்து (18:7)

⬅ வலமிருந்து இடம்
3. எகிப்து (7:9)
13. மாற்கு (15:39)
15. பெரோயா (17:10,11)
17. யாக்கோபு (12:1,2)
18. ஜனேயா (9:34)

⬆ கீழிருந்து மேல்
7. தாவீது (2:29)
12. மத்தியா (1:26)
16. கமாலியேல் (5:34)

**வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 5**

**வேதப்பகுதி: அப்போஸ்தலருடைய நடபடிகள்**

### சரியான பதில்களை அனுப்பிய முதல் 10 நபர்கள்:

- மணி மாலா சி
- ஜாய்ஸ் சாம்சன்
- ஆர்.ஜாக்குலின்.
- சா. ஜெஸி ஹெப்சியாள்
- சாந்தி டி
- சுசீலா
- கேப்ரியல் டி பிரசாத்
- பானுபிரியா.மா
- ரா. ஜெய்ஸ்பிரேமா
- பி.விஜிலா
- விமலா வில்சன்

Congratulations


### ஆசிரியர் குழு

பேதுரு தேவதாசன்
அற்புதராஜ் சாமுவேல்
ஜோ. இ. ஆ. ஈஸ்டர் ராஜ்
ஏ. ஆர். பீட்டர்
டெ. டென்சிங்
டார்வின் நேசகுமார் அ
ஷோபா தானியேல்
ஜோசஃபீன் ஷைனி பால்
கேதரின் சுஜி


மூன்று முக்கிய காரணங்களுக்காக வேதாகமத்தைப் படிக்க வருமாறு தேவன் உங்களைக் கேட்கிறார்: இது வளர்ச்சிக்கு அவசியம், முதிர்ச்சிக்கு இது அவசியம், உங்களை ஆயத்தப்படுத்துவதற்கும், உங்களுக்குப் பயிற்சி அளிப்பதற்கும் இது மிகவும் அவசியம். இதனால் அவருடைய நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு நீங்கள் அவருடைய கைகளில் இருக்கும், சுத்தமான, கூர்மையான கருவியாக இருப்பீர்கள். –ஹோவர்ட் ஹென்ட்ரிக்ஸ்

## வேதவாசிப்பு சவால்கள் - 01 மே 2025 முதல்

"விடாமுயற்சியுடன் வேதாகமத்தை வாசிப்பதன் மூலம், உங்கள் மனதை வேத வசனங்களால் நிரப்பி வைத்துக்கொள்ளுங்கள். அப்போது அதன் மதிப்பையும் ஆற்றலையும் விரைவில் கண்டுபிடிப்பீர்கள்." - ஜே சி ரைல்




பரிசுத்த வேதாகமத்தை வாசிப்பது ஒருபோதும் அதை வாசிப்பவரைக் களைப்படையச் செய்வதில்லை, மாறாக வாசிப்பவரின் மனதைப் புதுப்பித்து புத்துணர்வூட்டுகிறது. வேதத்தை வாசிப்பதின் பலன்களை இதுவரை நீங்கள் பெறாதிருந்தால், 01 மே 2025 முதல் துவங்கும் "வேத வாசிப்புச் சவால்களில்" ஒன்றில் சேர்ந்து வேதம் வாசித்து மகிழ நாங்கள் (GODependence) உங்களை அன்புடன் அழைக்கிறோம்.

**பின்வருவன நமது வேதவாசிப்பு சவால் பங்கேற்பாளர்கள் சிலரது அனுபவ சாட்சிகள்:**

"2002 ல் ஒரு முறை பரிசுத்த வேதாகமத்தை வாசித்து முடித்தேன். அதன் பின்னர் எத்தனையோ முறை படிக்க ஆரம்பித்தும் முடிக்க முடியவில்லை. இம்முறை GODependence வேத வாசிப்பு சவால்களின் உதவியோடு படித்து முடிக்க கர்த்தர் உதவி செய்தார். கர்த்தருடைய நாமத்திற்கு மகிமை உண்டாவதாக." - Vijaya Kumari Melbin

"ஒரே ஆண்டில் தமிழில் முழு வேதாகமத்தை வாசித்துவிட்டேன் என்பதில் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறேன். இது என்னுடைய முதல் அனுபவம். தொடர்ந்து என்னுடன் தொடர்பில் இருந்து, பின் தொடர்ந்து உற்சாகமளித்த GODependence வேதாகம வாசிப்பு சவால் குழுவினருக்கு மனமார்ந்த நன்றி." - K. Dhinakaran

"தொடரமுடியாமல் இடையில் நிறுத்தியுள்ளேன். 6 மாத வேதவாசிப்பு சவாலில் சேர்ந்த பிறகு, இரண்டு முறை முழுமையாக வாசித்து முடிக்க கர்த்தர் கிருபை செய்திருக்கிறார்." - R. Kinitha Franklin

**இதன் சிறப்பு அம்சங்கள்:**

- வேதவாசிப்பு சவால் காலம் 1 மாதம் முதல் 1 வருடம் வரை நீங்களே தெரிவு செய்யும் வாய்ப்பு. [முழு வேதாகமத்தையும் 1 மாதம் / 2 மாதங்கள் / 3 மாதங்கள் / 4 மாதங்கள் / 6 மாதங்கள் அல்லது 1 வருடத்தில் வாசித்தல்.]
- 10 மொழிகளில், உங்களுக்கு வசதியான ஒரு மொழியில் உள்ள குழுவில் இணைந்து கொள்ளலாம். [தமிழ், ஆங்கிலம், ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி]
- முந்தின தினம் இரவிலேயே கொடுக்கப்படும் வேதவாசிப்புப் பகுதி.
- வேதவாசிப்பை உற்சாகப்படுத்தும் மேற்கோள்கள் அல்லது காணொளிகள்.
- வேதவாசிப்பின் முன்னேற்றத்தை உறுதிப்படுத்த வாராந்திர, இருவார மற்றும் மாதாந்திர மீள்பார்வைகள்.
- வாசிப்பில் நீங்கள் பின்தங்க நேர்ந்தால், விடுபட்ட பகுதிகளை வாசிக்க வாய்ப்பு! எமது வாசிப்புத் திட்டத்தில் Catch - Up நாட்கள் மற்றும் திட்டங்களை மாற்றிக் கொள்ளுதல் ஆகியவை உண்டு. ஏனென்றால் வாழ்க்கையின் சிரமங்களை நாங்கள் புரிந்துகொள்கிறோம்!
- அனைவர் நலன் காக்கும் வாட்ஸ்அப் குழுக்களின் விதிமுறைகள்.
- பாராட்டுச் சான்றிதழ்கள் மற்றும் பரிசுகள் (*நிபந்தனைகளுக்குட்பட்டது)

எனவே, முழு வேதாகமத்தையும் வாசித்து முடிக்க நீங்கள் ஆர்வமாக இருந்தால், உங்கள் வசதிக்காக நாங்கள் வடிவமைத்துள்ள வேதவாசிப்பு சவால்களில் ஒன்றில் சேர்ந்து கொள்ளுங்கள். உங்களுக்கு வசதியான ஒரு **கால அளவுத் திட்டம்** மற்றும் **மொழி**_யைத் தேர்ந்தெடுத்து, அத்துடன் உங்கள் _**பெயர்** (வேதவாசிப்புச் சவாலை வெற்றிகரமாக முடிக்கும் போது அதற்கான பாராட்டுச் சான்றிதழில் அச்சிடப்பட வேண்டிய விதத்தில்) மற்றும் **வயதை** இந்த இணைப்பில் **https://wa.me/96565962559** கிளிக் செய்து, **+965 6596 2559** என்ற WhatsApp எண்ணிற்கு தெரிவிக்கவும்.

நன்றி. தேவன் உங்களை ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

CLICK HERE **https://wa.me/96565962559**

- **GODependence குழு**

**** 👆 இந்த செய்தியை உங்கள் குடும்ப உறுப்பினர்கள், உறவினர்கள், கிறிஸ்தவ நண்பர்கள் மற்றும் உங்கள் சபை உறுப்பினர்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளுங்கள்... இதனால் அவர்களும் வழக்கமாக வேதாகமத்தை வாசிக்கும் பழக்கத்திற்குள் வரலாமே!

**தேவன் திட்டமிட்டிருக்கிற வளர்ச்சி, தேவன் தந்த உணவு, தேவன் அறிவுறுத்தும் மனநிலை, மற்றும் தேவன் வாக்குப்பண்ணின கிரீடம் ஆகியவற்றை பரிசுத்த வேதாகமம் வெளிப்படுத்தி ஒழுங்குபடுத்துகிறது. - மெல்வின் வர்திங்டன்**

# விளையாடுவோம் வேதாகம விளையாட்டு - 6

**வேதப்பகுதி: ரோமர்**

QUIZ!

குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்க வேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.

**கட்டங்களில் ஒளிந்திருக்கும் ரோமர் அதிகாரத்தில் உள்ள முக்கியமான வார்த்தைகளை கண்டுபிடி**

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| அ | உ | தூ | ம | ர | ண | ம் | லா | கா | கி |
| போ | அ | ஞெ | நி | லை | ஏ | மா | ளி | வி | பா |
| யூ | த | ன் | நீ | ஆ | வா | ழ | ஷ் | சு | ம் |
| ட் | சூ | ஈ | பு | வே | க் | றீ | மி | வா | றை |
| ஜீ | நே | ளி | ரூ | ங் | கு | று | பா | ச | இ |
| மூ | ன் | வா | ஜே | யோ | த் | கு | மு | ம் | யி |
| ம் | வ | பா | ழ் | ஹ | த | ஜே | வீ | பை | ட் |
| ஊ | ஜீ | ஷ | றை | ஔ | த் | ரா | பை | லா | டா |
| உ | ய | தோ | பி | யா | த | ஜ | இ | ரு | ழி |
| நீ | தி | மா | ன் | லூ | ம் | தி | ன் | மை | கி |
| டே | த் | ஓ | ஞு | வு | யா | நா | ஷி | சு | ஊ |
| ம | நி | பா | ஸ்ரீ | எ | லி | யா | ணி | ப் | ம் |

https://forms.gle/BmSWwmmvGqG66VSFA

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/04/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.
சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

## GODependence வேதவாசிப்பு சவால்கள் தொடர்பு எண்கள்:

**பல்வேறு மொழிகளில் நடைபெறும் வேத வாசிப்பு சவால்களுக்காக GODependence பின்வரும் தொடர்பு எண்களை பயன்படுத்துகிறது.**

**நீங்கள் எந்த மொழியில் வேதவாசிப்பு சவாலில் சேர விரும்புகிறீர்களோ, அதற்குரிய எண்ணில் தொடர்பு கொண்டு குழுவில் சேரலாம்.**

- **தமிழ் - +965 6596 2559**
- **ஆங்கிலம் - +91 95255 95265**
- **பிற மொழிகள் - +91 99628 34944**

(ஹிந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி அல்லது பெங்காலி)

---

## GODependence சமூக ஊடக தளங்கள்

### GODependence WhatsApp Channel

இது தமிழில் GODependence இன் அதிகாரப்பூர்வ whatsapp சேனல்.

தினமும் வேதாகமம், வேதவாசிப்பு குறித்த மேற்கோள்கள் மற்றும் அவ்வப்போது வேத வாசிப்பு சவால்கள் குறித்த மற்றும் பிற அறிவிப்புகள் பெற விரும்பினால், நமது தமிழ் சானலை follow பண்ணுங்கள்... நன்றி.

CLICK HERE https://whatsapp.com/channel/0029Va8tCqzC6ZvpLu3JBj3R




JOIN NOW!

### GODependence YouTube Channel

GODependence தமிழ் சேனல் 1K சந்தாதாரர்களையும் 250 வீடியோக்களையும் எட்டியுள்ளது .

CLICK HERE https://youtube.com/@godependencetamil






### எமது தரிசனம்

ஜனங்கள் தேவனை சார்ந்து இருக்கும் வாழ்க்கையை கட்டமைத்துக் கொள்ள அவர்களுக்குத் தேவையான ஞானம், ஆக்கவளம் மற்றும் வலிமை அளிப்பது.

### எமது பணித்திட்டம்

வேத வசனம் மற்றும் ஜெபத்தில் தங்களை அதிகமாக ஈடுபடுத்திக் கொள்வதன் மூலமாக ஜனங்கள் தேவனைச் சார்ந்து இருப்பதில் உதவ GODependence நாடுகிறது.

**நாம் தேவனுடைய வார்த்தையை நம் இருதயங்களில் எழுத தவறிவிடுகிறபடியால் நாம் மிகுந்த வேதனைப்படுகிறோம்.**

**- லைலா கிஃப்டி அகிதா**

# உங்களுக்குத் தெரியுமா?






சூரியன் ஒரு நாள் நின்றது! யோசுவா போரின் போது பகல் நீடிக்க ஜெபம் செய்தார் **(யோசுவா 10:13).**

உங்களுக்குத் தெரியுமா?

பரிசுத்த வேதாகமத்தின் நீளமான பெயர் **"மகேர்-சாலால்-அஷ்-பாஸ்"** ஏசாயா தனது மகனுக்கு இந்தப் பெயரை ஒரு தீர்க்கதரிசன அடையாளமாக சூட்டினார் **(ஏசாயா 8:1).**



---

## கடந்த மாத இதழில் விளையாடுவோம் வேதாகம விளையாட்டு- 5 இல் பங்கு பெற்று சரியான பதில்களை அனுப்பிய நபர்களின் பெயர்கள் மற்றும் சரியான பதில்கள்

**விளையாடுவோம் வேதாகம விளையாட்டு -5**

**வேதப்பகுதி: அப்போஸ்தலருடைய நடபடிகள்**

**I. இடங்களின் பெயர் :**

1) காசா (அப். 8:6)
2) யூதேயா (அப். 1:8)
3)எகிப்து (அப். 2:10)

**II. நபர்களின் பெயர்களை கண்டுபிடி**

1).யூதாஸ் (அப். 1:24, 5:37)
2).மத்தேயு (அப். 1:13)
3)பிலிப்பு (அப். 1:13, 8:6)

**III அற்புதங்கள் என்ன?**

1). சப்பாணி குணமடைதல் - (பேதுருவால் ) (அப். 3: 6-9)
2). ஒரு சிறு பெண்ணிடமிருந்து பிசாசை துரத்துதல் (அப். 16: 16-18)
3).ஐத்திகு உயிரோடு எழுப்புதல் (அப். 20: 9,10)
4). புபிலியுவினுடைய தகப்பன் குணமாக்கப்படுதல் (அப். 28: 7-9)

**சரியான பதில்களை அனுப்பிய 10 நபர்களின் பெயர்கள் :**

1. உ.மிராக்கிளின் ஜெஸி
2. ஜாய்ஸ் சாம்சன்
3. ஜோசபின் ஜெயா அமோஸ்
4. கேப்ரியல் டி பிரசாத்
5. ரெபேக்கா அஞ்சலா தேவி
6. பி.விஜிலா
7. சாந்தி டி
8. மோகன்ராஜ் டி
9. கிறிஸ்டின் ஜோசப்
10. த.ரூபிஜான்சிராணி

*Congratulations*

**வேதாகமம் எல்லா புத்தகங்களிலும் மிகப்பெரியது, அதைப் படிப்பதே எல்லா நோக்கங்களிலும் உன்னதமானது, அதை புரிந்து கொள்வதே அனைத்து இலக்குகளிலும் உயர்வானது. - சார்லஸ் சி. ரைரி**

# GODependence வேத வாசிப்பு சவால்கள்

**31 மார்ச் 2025 அன்றுடன் முடிவடைந்த GODependence வேதவாசிப்பு சவால்களில் வெற்றிகரமாக வேதாகமத்தை வாசித்து முடித்தவர்கள்**



















தேவன் மனிதனுக்கு வழங்கிய மிகச்சிறந்த பரிசு பரிசுத்த வேதாகமம் என்று நான் நம்புகிறேன். - ஆபிரகாம் லிங்கன்

# அரிமத்தியாவைச் சேர்ந்த யோசேப்பு

## இயேசுவை அடக்கம் செய்யத் துணிந்த செல்வந்தர்.

**(மத்.27:57-60; லூக்.23:50-53)**

**அரிமத்தியாவைச் சேர்ந்த யோசேப்பு** ஒரு நல்ல, நேர்மையான செல்வந்தர். அவர் யூத ஆலோசனைச் சங்கத்தின் முக்கிய உறுப்பினராக இருந்தபோதிலும், அவர் இயேசு கிறிஸ்துவின் சீடர் என்பதால் இயேசுவை சிலுவையில் அறைய வேண்டும் என்ற அவர்களின் முடிவு மற்றும் செயலுக்கு அவர் சம்மதிக்கவில்லை.

இயேசுவின் மரணத்திற்குப் பிறகு, அவர் தைரியமாக பிலாத்துவிடம் சென்று இயேசுவின் உடலைக் கேட்டார். யோசேப்பு உடலை சுத்தமான துணியில் சுற்றி தனது புதிய கல்லறையில் வைத்தார்.

விசாரணையின் போது, பிலாத்து இயேசுவுக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு எந்த அடிப்படையையும் கண்டுபிடிக்க முடியவில்லை. ஆனால் சிலுவையின் கல்வெட்டு இயேசு தேசத்துரோகக் குற்றச்சாட்டுகளுக்காக சிலுவையில் அறையப்பட்டதை சித்தரித்தது. மனிதக் கண்ணோட்டத்தில், தேசத்துரோகக் குற்றச்சாட்டுக்காக தூக்கிலிடப்பட்ட ஒருவரை அடக்கம் செய்வது வெட்கக்கேடான செயல்.

ஆனால் இயேசுவின் மரணம் பற்றிய உண்மையை யோசேப்பு அறிந்திருந்தார். எனவே அவர் பொதுமக்களின் கருத்தைப் புறக்கணித்து சரியானதைச் செய்தார்.

**அரிமத்தியாவைச் சேர்ந்த யோசேப்பு இயேசு கிறிஸ்துவிடம் உறுதியான பக்தியைக் காட்ட நமக்கு சவால் விடுகிறார்.**

- இயேசுவை நம்புவது ஆபத்தானதாக இருந்தாலும், நாம் விசுவாசத்திலிருந்து பின்வாங்கக்கூடாது.
- யூதர்களிடமிருந்து தான் எதிர்கொள்ளும் எதிர்ப்பை யோசேப்பு அறிந்திருப்பார். ஆனால் அதற்கான கிரயத்தை அவர் செலுத்தத் தயாராக இருந்தார். சீடத்துவத்தின் விலையைச் செலுத்துவதன் மூலம் விசுவாசத்தில் முன்னேற நாம் தயாரா?
- யோசேப்பு இயேசுவை அவரது இடத்தில் புதிதாக வெட்டப்பட்ட கல்லறையில் அடக்கம் செய்தார். நம்மால் முடிந்ததைச் செய்து இயேசுவை மதிக்க நாம் தயாரா?

– சகோ. பீட்டர் ஏ.ஆர். பாலக்காடு, கேரளா.

---

## வேதாகம குறுக்கெழுத்துப் புதிர் - 6

**வேதப்பகுதி: ரோமர்**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ■ | 1 | 2 | | | | | | 3 |
| 4 | | | | | | | 5 | ■ |
| ■ | | ■ | 6 | | | 7 | | 8 |
| | | | | 9 | | | | |
| | | | | 10 | | | | |
| | ■ | | | ■ | | | ■ | |
| 11 | ■ | 12 | 13 | ■ | 14 | | | |
| 15 | | | | 16 | | | | |
| 17 | | | | | | | 18 | 19 |

**⬇ மேலிருந்து கீழ்**

1. குணப்படும்படி ஏவுவது (5)
5. ____ வந்தபோது பாவம் உயிர் கொண்டது (4)
7. தேவனுடைய வலது பாரிசத்தில் இருப்பவர் (4)
8. கேள்வியால் வருவது (5)

**➡ இடமிருந்து வலம்**

2. ____ பண்ணுகிறதிலே முந்திக்கொள்ளுங்கள் (3)
4. இயேசு பலமாய் ரூபிக்கப்பட்ட ____ (6)
6. பவுலையும் சபையையும் உபசரித்தவன் (2)
14. மாம்சசிந்தை (4)
15. பெபேயாளின் சபை (5)
16. இளையவன், சிநேகிக்கப்பட்டவன் (4)
17. மாயமற்றதாயிருப்பதாக (3)

**⬅வலமிருந்து இடம்**

3. பாகாலுக்கு முன்பாக முழங்கால் படியிடாதவர்கள் ____பேர் (5)
5. கிரியை செய்கிறவனுக்கு வருகிற கூலி (3)
9. உணர்வில்லாததினால் இருளடைந்தது எது (5)
10. புகழ்ச்சி உண்டாக செய்ய வேண்டியது (3)
18. அகாயாவில் கிறிஸ்துவுக்கு முதற்பலன் (5)

**⬆கீழிருந்து மேல்**

11. நாம் கிறிஸ்துவுக்குள் ஒரே ____ (4)
12. தேவவசனத்தினால் உண்டாகிறவைகளில் ஒன்று (3)
13. பவுலின் இனத்தாரில் ஒருவன் (3)
14. பாவத்துக்கு நீங்கி விடுதலையாக்கப்பட்டவன் (6)
19. இதின் சம்பளம் மரணம் (3)

**குறிப்பு : பதில்கள் அனைத்தும் வசன ஆதாரத்துடன் இருக்கவேண்டும். வேதாகமத்தைப் பார்த்துக் கண்டுபிடிக்கலாம்.**

CLICK HERE https://forms.gle/hTLELmqTmYZPWTdg6

மேலே கொடுக்கப்பட்ட இணைப்பை கிளிக் செய்து சரியான பதிலை 25/04/2025 க்கு முன்பதாக அனுப்பவும்.சரியான பதில் அனுப்பும் முதல் 10 நபர்களுடைய பெயர்கள் அடுத்த மாத இதழில் குறிப்பிடப்படும்.

தேவனுடைய வார்த்தையாகிய கிறிஸ்துவைப் பற்றிய நற்செய்தியானது பரிசுத்தமாகுதலை ஊக்கப்படுத்துவதில் மிகவும் வல்லமையுள்ளதாகவும் மற்றும் நம் கடமை மற்றும் பாக்கியம் ஆக இருக்கிற முழு இருதயத்தோடு அர்ப்பணம் செய்வதையும் கொண்டு வருகிறது. - சார்லஸ் ஸ்பர்ஜன்

GODependence
True freedom is being dependent on God

# வேத வாசிப்புச் சவால்கள்

## 10* மொழிகளில் 6 விதமான

## வேதவாசிப்புத் திட்டங்கள்

*எமது வேத வாசிப்புச் சவால்கள் ஒவ்வொரு மாதமும் முதல் தேதியில் துவங்குகிறது.

**1 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும்
45 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
2 மணி
30 நிமிடங்கள்

**2 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும்
22 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
1 மணி
30 நிமிடங்கள்

**3 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும்
15 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
60 நிமிடங்கள்

**உங்களுக்கு வசதியான வேதவாசிப்புத் திட்டத்தைத் தேர்ந்தெடுக்கும் வசதி**

**4 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும்
11 அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
45 நிமிடங்கள்

**6 மாத வேதவாசிப்புச் சவால்**
தினமும்
7 அல்லது 8
அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
25 நிமிடங்கள்

**1 வருட வேதவாசிப்புச் சவால்**
தினமும்
3 அல்லது 4
அதிகாரங்கள்
வாசிப்பு நேரம்
15 நிமிடங்கள்

இன்னும் தாமதம் ஏன்?
இன்றே சேருங்கள்.

தொடர்புக்கு: +965 6596 2559

கீழே கொடுக்கப்பட்ட மாதிரியின் படி வாட்சப்பில் உங்கள் விவரங்களை அனுப்பவும்:
<உங்கள் பெயர்> <வயது> <காலஅளவு> <மொழி>.

*உங்களுக்கு ஏற்ற வேதவாசிப்புத் திட்டம் மற்றும் விருப்பமான மொழியில் எங்கள் வேத வாசிப்புச் சவால்கள் ஒன்றில் நீங்கள் சேரலாம்.

*எங்கள் வேதவாசிப்புச் சவால்கள் ஆங்கிலம், தமிழ், இந்தி, மலையாளம், கன்னடம், தெலுங்கு, ஒடியா, பஞ்சாபி, மராத்தி மற்றும் பெங்காலி மொழிகளில் உண்டு.

சத்தியத்தையும் அறிவீர்கள், சத்தியம் உங்களை விடுதலையாக்கும் என்றார். - யோவான் 8:32

**உங்கள் பெயர், ஊர், குடும்பம், கிறிஸ்தவ பின்னணி & வளர்ப்பு:**

ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் உங்கள் அனைவருக்கும் என் அன்பின் ஸ்தோத்திரங்கள். என்னுடைய பெயர் ஹெலன் மெர்சி. நான் நாகப்பட்டினம் மாவட்டத்தில் வசித்து வருகிறேன். எனது தந்தை பெயர் தேவ கிருபாகரன். தாய் பெயர் ஷீலா டார்லிங் அன்பரசி. எனது தாயும் தந்தையும் ஆண்டவருக்கு பயந்து ஆண்டவருடைய வழியில் நடக்குமாறு எங்களை வழி நடத்தினார்கள். என்னுடைய சிறுவயதில் என் அப்பா மரித்து விட்டார்கள். அதன் பிறகு என் தாய் அவர்களே எங்களை நன்றாக கர்த்தருக்குள்ளாக வளர்த்து வந்தார்கள். கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பதாக என் தாயும் இறந்து விட்டார்கள். ஆனால், என் தாய் எங்களுக்கு கற்றுத் தந்த காரியம் என்னவென்றால் "நீங்கள் வேதாகமத்தை நன்கு வாசியுங்கள், அதன்படி நடவுங்கள், அதை உங்கள் வாழ்க்கையில் எப்பொழுதும் பிரயோஜனப்படுத்துங்கள்." அப்படியாக சொல்லித்தந்த காரியங்களை இதுவரையும் நாங்கள் கடைபிடித்து வருகிறோம். எங்களுக்கு தாயும் தகப்பனும் இல்லை என்கின்றதான சூழ்நிலைகள் ஏற்பட்டாலும் இயேசுவே எங்களுக்கு தகப்பனாகவும் தாயாகவும் இருந்து இன்று வரை எங்களை நடத்தி வருகிறார். நாங்கள் படித்த வேத வசனங்கள் தான் எங்களுக்கு ஆறுதல், எங்களை வழி நடத்துகிறது, உற்சாகப்படுத்துகிறது. எங்களுக்கு நல்ல ஒரு வாழ்க்கையே தரக்கூடிய ஒரே ஒரு காரியம் வேதாகமம் மட்டும்தான். வேதாகமத்தை நாங்கள் எந்த அளவில் படிக்கிறோமோ, அந்த அளவில் நாங்கள் ஆசீர்வதிக்கப்பட்டிருக்கிறோம்.

**நீங்கள் இதுவரையும் சராசரியாக எத்தனை முறை பரிசுத்த வேதாகமத்தை முழுவதும் வாசித்திருக்கிறீர்கள்?**

நான் தற்போது இந்த வயது வரை 20 முறை முழுவதும் முழு வேதாகமத்தை வாசித்து முடித்துள்ளேன். ஒருமுறை பத்து மாதத்திற்குள்ளாக முழு வேதாகமத்தையும் என் சொந்த கைப்பட நான் எழுதி முடித்துள்ளேன். இதை எழுதுவதற்கு தேவன் எனக்கு உதவி செய்தார். அதை நான் எழுதும் போது எனக்கு பலவித சோதனைகள் ஏற்பட்டது. அந்த வருடத்தில் தான் என் தாயும் இறந்து விட்டார்கள். அதை நான் தொடங்கும் போது என் தாய் என் கூடவே இருந்தார்கள். என்னை உற்சாகப்படுத்தினார்கள். ஆனால் என் தாய் மரித்து போனாலும், நான் அதை முடிக்காமல் இருக்க கூடாது, கண்டிப்பாக முடித்து விட வேண்டும் என்று ஒரு வருடத்திற்குள்ளாக நான் அதை முடிக்க வேண்டும் என நினைத்தேன். ஆனால் பத்து மாதத்திற்குள்ளாக என் சொந்த கைப்பட அதை எழுதி முடித்தேன். தேவன் மாத்திரமே எனக்கு உதவி செய்தார். பலன் தந்தார். "வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் அவைகளால் உங்களுக்கு நித்தியஜீவன் உண்டென்று எண்ணுகிறீர்களே" என்று வேத வசனம் சொல்லுகிறது. நீங்களும் வேதத்தை வாசியுங்கள் தியானியுங்கள் உங்கள் குழந்தைகளையும் வாசிக்க வையுங்கள்.

**நீங்கள் தற்போது வாசித்து முடித்திருக்கிற இந்த வேதவாசிப்பு சவாலில் GODEPENDENCE வாட்சாப் குழுவின் நடைமுறைகள் எந்த அளவில் உதவின?**

இந்த GODependence திட்டத்தில் நான் இணைந்த பிறகு இரண்டு முறை முழு வேதாகமத்தை வாசித்து முடித்துவிட்டு மூன்றாவது முறை வாசித்துக் கொண்டிருக்கிறேன். இது எனக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. அந்த Timetable படி நான் படிக்கும்போது எனக்கு அதை சரியாக படித்து முடிக்கவும் உதவியாயிருக்கிறது. வேதத்தை தியானிக்க பயன்படுகிறது. என் சகோதரியும் இதில் இணைந்திருக்கிறார்கள். என் சித்தி என்னுடைய ஆலயத்தில் என்னுடைய நண்பர்கள் என பல பேர் இதில் இணைந்து இருக்கிறோம். நீங்களும் இத்திட்டத்தில் இணைந்து கொள்ளுங்கள்.

**இறுதியாக, தாங்கள் வேதாகமத்தை வாசிப்பதன் முக்கியத்துவம் குறித்து மற்றவர்களுக்கு சொல்ல விரும்புவது என்ன?**

முதல் முறை வாசிக்கும் போது உங்களுக்கு சற்று சிரமமாகத்தான் காணப்படும். ஆனால் போகப் போக உங்கள் வாழ்க்கையில் வேதவாசிக்கும் அனுபவம் எளிமையாக மாறிவிடும். நீங்கள் ஒரு முறை படிங்கள். இரண்டு முறை படிங்கள் அப்படியாக திரும்பத் திரும்ப நீங்கள் வேதாகமத்தை வாசிக்கும் போது அதின் வார்த்தைகள் உங்கள் உள்ளத்தில் பதியும்போது உலகத்தில் அது உங்களுக்கு வெளிச்சத்தை தரக்கூடிய வகையில் பல ஆசீர்வாதமான விதத்தில் உங்களை மாற்றுவது வேதாகம வசனம் மட்டும் தான். தொடர்ந்து வேதாகமத்தை வாசியுங்கள். உங்கள் வாழ்க்கையில் வெற்றி பெறுங்கள். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக ஆமென்

**மேலும் சாட்சிகளுக்கு கீழ்க்கண்ட YOUTUBE இணைப்புகளை கிளிக் செய்து பார்க்கவும்**

உங்கள் வாழ்க்கையே மாற்றும் ஒரு புத்தகம் என்றால் அது வேதாகமம் CLICK HERE SIS.AMUTHA

தடைகள் எல்லாம் தகர்த்து, வேதாகமம் வாசிக்க தேவன் கிருபை செய்தார் CLICK HERE SIS.GNANA JEYA

# ரோமர்

**எழுதப்பட்ட காலம் :** கி.பி. 56- கி.பி. 57
**நிகழ்வுகள் நடைபெற்ற காலம் :** கி.பி. 56- கி.பி. 57

**நூலின் ஆசிரியர் :** அப்போஸ்தலனாகிய பவுல்
**புத்தக வகை :** கடிதங்கள்

## நூல் அறிமுகம்

- வேதாகமத்தில் உள்ள ஆழமான இறையியல் பகுதியாக விளங்குவது ரோமர் கடிதமாகும். இதனைப் பவுல் கைப்பட எழுதவில்லை, மாறாக 16:22 இல் காண்கிறபடி தெர்த்தியு என்பவரை எழுத்தாளராகக் கொண்டு எழுதினார்.

## சூழலும் நோக்கமும்

- இந்த கடிதம் ரோமில் "தேவனால் நேசிக்கப்பட்டவர்கள் மற்றும் பரிசுத்தவான்களாக அழைக்கப்பட்டவர்களுக்கு" (ரோமர் 1:7) எழுதப்பட்டது. பவுல் ஒரு ரோம குடிமகனாக இருந்ததாலும், அவர் இதுவரை ரோமில் உள்ள திருச்சபைக்கு செல்லாததாலும் இந்தக் கடிதம் அவர்களுக்கான அறிமுகமாகவும் அமைந்தது. பரிசுத்த பவுல் இக்கடிதத்தை எழுதும்போது ரோமுக்குச் சென்றிருக்கவில்லை. எனினும் அக்காலத்தில் திருச்சபை அங்கே வேரூன்றியிருந்தது. இந்த ரோம சபையை பவுல் சந்திக்க விழைந்தார். ஸ்பெயின் நாடு போகும் வழியில் ரோமக் கிறிஸ்தவர்களைச் சந்திக்க அவர் திட்டமிட்டார் (15:28) மாசிதோனியா, அக்காயா ஆகிய நாடுகிளலிருந்து இறைமக்கள் கொடுத்த காணிக்கையை எருசலேம் கொண்டு போகுமுன் கொரிந்து நகரிலிருந்து இக்கடிதத்தை அவர் கி.பி. 57-58 காலக் கட்டத்தில் எழுதனார். பவுல் இக்கடிதத்தை எழுதுமுன் கலாத்தியருக்கு ஒரு கடிதத்தை எழுதியிருந்தார். விசுவாசத்தினால் தேவனுக்கு ஏற்புடைமை ஆதல், கிரியைகள் சட்டங்கள் ஆகியவற்றை விட விசுவாசமே மேலானது என்னும் பவுலின் போதனைகள் கடும் எதிர்ப்புக்குள்ளாகியது. கிரியைகள் மற்றும் சட்டத்திற்கு மிகுந்த முக்கியத்துவம் கொடுக்க முனைந்தனர். எனவே பவுல் இக்கடிதத்தை எழுதுகிறார். தம்முடைய போதனையைக் குறித்தும் தம் அப்போஸ்தலப் பணியைக் குறித்தும், தாம் அவர்களைச் சந்திக்குமுன் அவர்கள் தம்மைப் பற்றிய தவறான கருத்துக்களைக் கைவிட வேண்டும் என்றும் எண்ணி அவர் இக்கடிதத்தை எழுதினார். எருசலேம் மக்களுக்கான நன்கொடையை நேரில் சென்று கொடுக்குமுன் தம்மையும் தாம் திரட்டிய கொடையையும் அவர்கள் ஏற்றுக்கொள்ளும்படி (15:31), அவர்களைத் தயாரிப்பதும் இக்கடிதத்தின் சில பகுதிகளின் (குறிப்பாக அதி 9-11) நோக்கமாக இருந்தது.

## முக்கிய வசனங்கள்

- ரோமர் 1:16, 3:9-11, 3:21, 3:23, 5:8, 6:23, 8:9, 8:28, 8:37-39, 10:9-10, 12:1, 12:19, 16:17

## புத்தகத்தின் சுருக்கம்

- ரோமத் திருச்சபையில் கடைசியாக ஊழியம் செய்ய முடிந்ததைப் பற்றி பவுல் உற்சாகமாக இருந்தார், மேலும் அந்த உண்மையை அனைவரும் நன்கு அறிந்திருந்தனர் (ரோமர் 1:8-15). அவர் ரோம் சென்று பின்னர் ஸ்பெயினுக்கு செல்ல எண்ணினார் (ரோமர் 15:24), ஆனால் அவர் எருசலேமில் கைது செய்யப்பட்டபோது அவரது திட்டங்கள் தடைபட்டன. அவர் இறுதியில் ஒரு கைதியாக ரோம் சென்றார். கொரிந்துக்கு அருகில் உள்ள செங்கிரியாவில் உள்ள திருச்சபையில் உறுப்பினராக இருந்த பெபேயாள்(ரோமர் 16:1), கடிதத்தை ரோமுக்கு கொண்டு சென்றிருக்க வேண்டும். ரோமர் புத்தகத்தை 4 பிரிவுகளாகப் பிரிக்கலாம்: நீதி தேவை, (1:18-3:20), நீதி வழங்கப்பட்டது (3:21–8:39), நீதி நியாயப்படுத்தப்பட்டது (9:1–11:36), நீதியைக் கடைப்பிடித்தல் (12:1–15:13). பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டு முதலில் எல்லா மனிதர்களின் பாவத்தையும் பவுல் கண்டிக்கிறார். ரோமில் இருப்பவர்கள் சரியான பாதையில் செல்வார்கள் என்ற உறுதி அவருக்கு இருந்தது.

## புத்தகத்தில் இயேசுகிறிஸ்து

- சுவிசேஷத்தைப் பற்றி அவர் வெட்கப்படவில்லை (ரோமர் 1:16) ஏனென்றால் அது தேவவல்லமையாகும். ரோமர்களின் புத்தகம் தேவன் யார், அவர் என்ன செய்தார் என்பதையும், இயேசு கிறிஸ்துவின் மரணம் எதைச் சாதித்தது என்பதையும், நம்மைப் பற்றியும், கிறிஸ்து இல்லாமல் நாம் எப்படி இருந்தோம், கிறிஸ்துவை நம்பிய பிறகு நாம் யார் என்பதையும் சொல்கிறது. அதி 1-11 வரையிலான பகுதியில் குறிப்பாக 1:17 ல் விசுவாசத்தினால் தேவனுக்கு ஏற்புடையவரே வாழ்வு பெறுவர் என்கிறார். யூதர்கள் என்றாலும் பிற இனத்தவர்கள் என்றாலும் அவர்கள் தேவனுக்கு எதிரானவர்களே. எல்லாருக்கும் மீட்புதேவை. இந்த மீட்பு இயேசு மீது நம்பிக்கை கொளவதால் வருகிறது. நியாயப்பிரமாணத்தினாலோ, விருத்தசேதனத்தினாலோ இது வருவதில்லை. புதுவாழ்வு பற்றிப் பேசும் பவுல் அதை ஆவிக்குரிய வாழ்வு என்கிறார். 9-11 அதிகாரங்களில் யூதர்கள் கிறிஸ்துவைப் புறக்கணித்தது. தேவனின் திட்டப்படி மனிதகுலம் முழுவதும் கிறிஸ்து இயேசு வழியாகக் தேவனின் கிருபையைப் பெறவே என்றும், பிற இனத்தார் இப்போது மனம் மாறியிருப்பது யூதர்களிடையே போட்டி மனப்பான்மையை வளர்க்கவே என்றும், தேவன் யூதர்களுக்குக் கொடுத்த வாக்குறுதத்தம் மாறுவதில்லை என்பதால் யூதர்கள் ஒருநாள் மனம் மாறுவர் என்றும் அவர் குறிப்பிடுகிறார். 12 முதல் 15 வரையுள்ள அதிகாரங்களில் நடைமுறை ஒழுங்குகள் தரப்பட்டுள்ளன.

## நடைமுறைப் பயன்பாடு

- நம்மைக் காப்பாற்றிக் கொள்ள நாம் எதுவும் செய்ய முடியாது என்பதை ரோமர்களின் புத்தகம் நமக்குத் தெளிவுபடுத்துகிறது. நாம் செய்த ஒவ்வொரு "நல்ல" செயலும் தேவனுக்கு முன்பாக ஒரு அழுக்கு துணியாக இருக்கிறது. நாம் நம்முடைய அக்கிரமங்களிலும் பாவங்களிலும் நாம் இறந்துவிட்டோம். தேவன் தம்முடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவை நமக்குப் பதிலாக சிலுவையில் மரிக்க அனுப்பியதன் மூலம் தேவகிருபையை வெளிப்படுத்தினார். நாம் நம் வாழ்க்கையை கிறிஸ்துவிடம் திருப்பும்போது, நாம் இனி நம் பாவ சுபாவத்தால் கட்டுப்படுத்தப்படுவதில்லை, ஆனால் நாம் ஆவியானவரால் கட்டுப்படுத்தப்படுவோம். இயேசுவை ஆண்டவர் என்று அறிக்கையிட்டு, அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்தார் என்று நம்பினால், நாம் இரட்சிக்கப்படுவோம் . மீண்டும் பிறந்த நாம் தேவனுக்கு அளிக்கப்பட்ட நம் வாழ்க்கையை அவருக்கு உயிருள்ள பலியாக ஒப்புகொடுத்து வாழ வேண்டும். நம்மைக் காப்பாற்றிய இறைவனை வணங்குவதே நமது உயர்ந்த விருப்பமாக இருக்க வேண்டும். ரோமர்களின் சிறந்த பயன்பாடு ரோமர் 1:16 ஐப் பயன்படுத்துவதாகும.

## நூலின் அமைப்பு

1.முன்னுரை (வாழ்த்து, நன்றியும் ஜெபமும்) 1:1 - 17
2.மனிதருக்கு மீட்பு தேவை 1:18 - 3:20
3.தேவன் மனிதரைத் தமக்கு ஏற்புடையவராக்கும் முறை 3:21 - 4:25
4.கிறிஸ்துவுக்குள் புதுவாழ்வு 5:1 - 8:39
5.தேவனின் மீட்புத் திட்டத்தில் இஸ்ரவேலர் 9:1 - 11:36
6.கிறிஸ்தவ வாழ்வு 12:1 - 15:13
7.முடிவுரையும் வாழ்த்தும் 15:14 - 16:27

GODDependence

தொகுப்பு: சகோ. A. டார்வின் நேசகுமார்

தொடர்ச்சியான, நிலையான, மற்றும் தேவையான அளவு தேவனுடைய வார்த்தையை நாம் நம் வாழ்வில் உட்கொள்ளவில்லை எனில், தேவபக்தியுள்ள ஒரு வாழ்க்கையை வாழ்வதற்கு வாய்ப்பே இல்லை. - ஜெரி ப்ரிட்ஜஸ்

## 1. ரமலான் மற்றும் லெந்துகால வேத வாசிப்பு சவால்கள் - 2025

பிப்ரவரி 28 இல் தொடங்கின ரமலான் கால வேதவாசிப்பு சவால்கள் மார்ச் 30-ல் முடிவடைந்தன. இதில் கலந்துகொண்ட 290 பேர்களில் 21 பேர் வெற்றிகரமாக பரிசுத்த வேதாகமத்தை முழுமையாக வாசித்து முடித்தனர்.

மார்ச் 5-ல் தொடங்கப்பட் லெந்து கால வேதவாசிப்பு சவால் குழுக்கள் ஏப்ரல் 20-ல் நிறைவடையும். தற்போது 1000 க்கும் மேற்பட்டோர் இந்த சவாலில் தொடர்கின்றனர்.




## 2. GODependence கருத்தரங்கு - ஏப்ரல் 2025



**தலைப்பு: கிறிஸ்துவின் சிலுவை மரணம் - ஒரு மருத்துவப் பார்வை**

(இயேசுகிறிஸ்துவின் சிலுவைப் பாடு மரணம் குறித்து நமக்குள் எழும் / மற்றவர்களால் எழுப்பப்படும் கேள்விகளுக்கான பதில்களை ஒரு கிறிஸ்தவ மருத்துவருடன் கலந்துரையாடி அறிந்துகொள்ளும் நேரலை நிகழ்வு)

**நாள்: 13 ஏப்ரல் 2025 ஞாயிறு மாலை இந்திய நேரம் 4 முதல் 5 மணி வரை**

## 3. சிறுவர் வேதவாசிப்பு சவால்கள்

2024-25 கல்வியாண்டுக்கான சிறுவர் வேதவாசிப்பு சவால் குழுக்கள் 2025 மார்ச் மாதத்தின் முதல் வாரத்துடன் நிறைவு பெற்றன. பருவம் 3 க்கான மனன வசனப் போட்டிகளில் கலந்து கொண்டவர்களின் வீடியோக்கள் Youtube சேனலில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளன.

வரும் கல்வியாண்டு 2025-26க்கான அடுத்த சிறுவர் வேதவாசிப்பு சவால்கள் ஜூன் 2025 இல் ஆரம்பிக்கும். இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் 2025 மே மாதத்தில் குழுக்களில் பகிரப்படும்.



## 4. வேத தியான குழுக்கள் (BMG) - July 2025 முதல்



தவிர்க்க இயலாத காரணங்களினால், மறுபடியும் ஆரம்பிக்க வேண்டிய வேத தியான குழுக்கள் (BMG) ஜூலை 2025-ல் இருந்து தான் ஆரம்பித்து தொடர்ந்து நடத்தப்பட இருக்கின்றன. இவற்றில் கலந்து கொள்ள விரும்புகிற வர்களுக்கான பயிற்சிகள் ஜூன் 2025 ல் நடைபெறும்.

இது குறித்த அறிவிப்பு மற்றும் விரிவான தகவல்கள் வேதவாசிப்பு குழுக்களில் பகிரப்படும்.

FOLLOW US!

GODependence வேதவாசிப்பு சவால்கள்

+965 6596 2559

GODependence - தமிழ் (YouTube)

GODependence - தமிழ் (Facebook)

GODependence - தமிழ் (Instagram)

GODependence (Website)

GODependence (X)

தொடர்பு முகவரி:
**GODependence Trust**
105 Y/1A, நல்ல சமாரியன் நகர்,
வள்ளியூர் - 627117,
தமிழ்நாடு, இந்தியா.

தேவனுடைய வார்த்தையானது வெறுமனே கேட்டு திரும்பச் சொல்வதற்கானது அல்ல; அது சுவாசிக்கப்பட வேண்டும், வாழ்க்கையில் வாழ்ந்து காட்டப்பட வேண்டும், ஒவ்வொரு செயலிலும் எடுத்துக் காட்டப்பட வேண்டும். - ஸ்டீவ் மரபொலி